# POSAD

PALUGAMAM OLD STUDENTS ASSOCIATION FOR DEVELOPMENT

# யாப்பு விதிகள்

அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கம்
பழுகாமம்
மட்டக்களப்பு.

## யாப்பின் கட்டமைப்பு

**குறிப்பு :** அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் யாப்பு மொத்தமாக 19 சரத்துக்களை உள்ளடக்கியுள்ளது. முகப்பு பக்கங்களுடன் சேர்த்து மொத்தமாக 23 பக்கங்களைக் கொண்டுள்ளது.


சரத்து 1 : பெயர், சின்னம்,சங்க கட்டமைப்பு

சரத்து 2 : தூரநோக்கு,பணிக்கூற்று

சரத்து 3 : நோக்கங்கள்,பணிகள்

சரத்து 4 : அதிகாரங்கள்.

சரத்து 5 : சங்கத்தின் கட்டமைப்பு

சரத்து 6 : சபைகளுக்கான கட்டமைப்பு

சரத்து 7 : உறுப்புரிமை

சரத்து 8 : கட்டணமும் சந்தாவும்

சரத்து 9 : துறைசார் நிலையியல் குழுக்கள்

சரத்து 10 : நிதிசார் நியதிகள்

சரத்து 11 : சபைகளின் உறுப்பினர்களின் கடமைகளும், பொறுப்புக்களும்

சரத்து 12 : கூட்டங்கள்

சரத்து 13 : அறிவித்தல்கள

சரத்து 14 : வாக்களிப்பும் தீர்மானங்களும்


சரத்து 15 : கிளைச்சங்கங்கள்


சரத்து 16 : முரண்பாட்டு முகாமைத்துவம்

சரத்து 17 : பொதுவான அறிவுறுத்தல்கள்

சரத்து 18 : திருத்தங்கள் மற்றும் விளக்கங்கள்

சரத்து 19 : யாப்பு ஏற்பு.


அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர்கள் சங்கம்
பொதுச்சபை
மேற்சபை (13 members)
போசகர் (LC – 1 & OS -1)
ஆலோசனை குழு (LC – 1 & OS -1)
நிருவாக சபை : 1. தலைவர்
2. செயலாளர்
3. பொருளாளர்
4. இணைத்தலைவர் (OS)
5. இணைசெயலாளர் (OS)
6. நிதி ஒருங்கிணைப்பாளர் (OS)
உள்ளகக் கணக்காய்வாளர் (LO)
முன்னேற்ற அறிக்கையாளர்
ஆலோசனை குழு (6 - 10)
• LC : 3
• OS : 3
நிருவாக சபை (21 &3)
தலைவர்
செயலாளர்
இணைசெயலாளர் (OS)
உப செயலாளர் (LC)
பொருளாளர்
நிதி ஒருங்கிணைப்பாளர் (OS)
இணைத்தலைவர் (OS
உப தலைவர் (LC)
*நிருவாகக்குழு உறுப்பினர்கள்
பாடசாலை அதிபர்கள் : 3
பெற்றார் ஆசிரியர் சங்கம் : 2
பழைய மாணவர் சங்கம் : 2
பாலர் பாடசாலை ஆசிரியை: 1
கல்வி ஒருங்கிணைப்பாளர் : 1
தொடர்பு ஒருங்கிணைப்பாளர் (LC) : 1
தொடர்பு ஒருங்கிணைப்பாளர் (OS) : 1
துறைசார் ஒருங்கிணைப்பாளர்(OS) 1
துறைசார் ஒருங்கிணைப்பாளர் (LC) 1
உள்ளக கணக்காய்வாளர்
• LC : 1 (NVP)
• OS : 1 (NVP)
முன்னேற்ற அறிக்கையாளர் (NVP)
ஒருங்கிணைப்பு குழு (6)
1. இணைத்தலைவர் (OS), 2. இணைச்செயலாளர் (OS), 3. நிதி ஒருங்கிணைப்பாளர் (OS),
4. தொடர்பு ஒருங்கிணைப்பாளர் (LC), 5. துறைசார் ஒருங்கிணைப்பாளர் (LC), 6. முன்னேற்ற அறிக்கையாளர் (LC)
நாட்டின் ஒருங்கிணைப்பாளர்கள் (வரையறையற்றது - OS)


PALUGAMAM OLD STUDENTS ASSOSIATION FOR DEVELOPMENT
அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர்கள் சங்கம்
Foreign Admin Body
வெளிநாட்டு நிருவாக சபை
Co-President
இணை தலைவர்
Joint Secretary
இணை செயலாளர்
Finance coordinator
நிதி ஒருங்கிணைப்பாளர்
Coordinators
ஒருங்கிணைப்பாளர்கள்
•Relationship coordinator
தொடர்பு ஒருங்கிணைப்பாளர்
•Sector coordinator
துறைசார் ஒருங்கிணைப்பாளர்
•Country Coordinators
நாட்டின் ஒருங்கிணைப்பாளர்கள்
1............
2............
3............
4............
உள்ளக
கணக்காய்வாளர்

## 1 : பெயர்

1.1 சங்கத்தின் பெயர் **“அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கம்”** என அழைக்கப்படும் இதன் அழைப்புப் பெயர் **“பொசாட்”“POSAD”** எனக் குறிப்பிடப்படும்.

In English, the name of the association will be **“ PALUGAMAM OLD STUDENTS ASSOCIATION FOR DEVELOPMENT ”** Calling Name **“POSAD”**.

1.2 : **சின்னம்**

## 2 : தூரநோக்கும் பணிக்கூற்றும்

### 2.1 தூரநோக்கு

உயர்தரங் கொண்ட விழுமியக் கல்விக்கூடாக சிறந்த பண்புடைய நற்பிரஜைகளைக் கொண்ட சமூகம்.

### 2.2 பணிக்கூற்று

ஒவ்வொரு சமூக வளர்ச்சிக்குமான துறைகளைக் கண்டறிந்து அத்துறை சார்ந்த நம்பிக்கையுள்ள அங்கத்துவ பங்களிப்பின் மூலம் நேர்மையன அர்ப்பணிப்புடனான சமூக பொருளாதார விருத்திக்கு வித்திடல்

**3 : நோக்கங்கள், பணிகள்**

**3.1 கல்வி**

3.1.1 எமது பாடசாலைகளின் நற்பெயரும், உயரியபண்பாடும் தொடர்ச்சியாகப் பேணப்படுவதினை உறுதிசெய்வதோடு அதற்கான நடவடிக்கைகளில் பங்கேற்றல்.

3.1.2 பாடசாலைகளின் நிருவாகங்களோடு ஆரோக்கியமான, சிறந்த உறவினை வளர்ப்பதன் மூலம் பாடசாலைகளுக்கும் அதன் பழைய மாணவர்கட்குமிடையே நீடித்து நிலைத்து நிற்ககூடிய நெருக்கமான தொடர்பையும், உறவையும் வளர்த்தல்.

3.1.3 பாடசாலை வளர்ச்சித் திட்டங்களில் அதியுன்னத மேம்பாட்டை கல்வி அபிவிருத்தில் வெளிப்படுத்துவதற்கான செயற்திறனானதும் வினைத்திறனானதுமான திட்டங்களை முன்மொழிவதோடு அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பங்குபற்றல்.

3.1.4 பாடசாலைகளால் முன்னெடுக்கப்படும் கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, கலைகலாசாரம், பௌதீகவளம், தகவல்தொடர்பாடல் தொழிநுட்பம் சார்பான மேம்பாட்டுத் திட்டங்களிற்கு, பாடசாலை நிருவாகத்துடன் ஒன்றிணைந்து சங்கத்தாலான சேவைகளை வழங்கி அந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றல்.

3.1.5 பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்தவர்களுக்கு தொழில்வழிகாட்டல் மற்றும் பொருத்தமான உயர்கல்வி நெறியை தெரிவு செய்தல் விடயங்களில் ஆலோசனை வழங்கி உதவிசெய்தல்.

3.1.6 முன்பள்ளி சிறார்களுக்கான மேம்பாடான ஆரம்பக்கல்வி சூழலை ஏற்படுத்தல்.

**03.2. சமூகஅபிவிருத்தி**

3.2.1 சமூக மக்களிடையே வாழ்வாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

3.2.2 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தலில் பங்களிப்பு செய்யதல்.

3.2.3 சமூகப்பணியில் ஈடுபடல் (சிரமதானம், அவசர கால நிவாரண நடவடிக்கைகள்)

3.2.4 சிறார்களுக்கான ஆரோக்கியம் மிகுந்த, பாதுகாப்பான சூழலை உறுதி செய்யும் உறுதி செய்யும் திட்டங்களுக்கு பங்களித்தல்.

3.2.5 "நிறைவான போஷாக்கு" எனும் எண்ணக்கருவினை சமூகத்தில் செயல்படுத்த பங்களித்தல்.

3.2.6 விசேட தேவையுடையோர்களுக்கான தேவைகளை நிறைவேற்றல்.

3.2.7 முதியோருக்கான பொதுவசதிகள் கிடைக்கும் பொருட்டு ஒருங்கிணைந்து செயற்படல்.

**3.3 விளையாட்டு**

விளையாட்டுத்துறை பயிற்சிகள்,மேம்படுத்தல் திட்டங்களை அமுல்படுத்துவதன் ஊடக ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புதல்.

**3.4சூழல் பாதுகாப்பு**

3.4.1 மரங்களை நடுதல்.

3.4.2 இயற்கை சூழலை பாதுகாத்தல்.

3.4.3 பொலுத்தீன் பாவனையை குறைக்க நடவடிக்கை எடுத்தல்.

3.4.4 போதைபொருள் மற்றும் புகைத்தல் தொடர்பான பாதிப்புகளை தெளிவுபடுத்துவுதன் மூலமாக அதனை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

3.4.5 சூழல் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியத்தை விழிப்புணர்வூட்டல்.

**3.5 கலை, கலாச்சாரம்**

3.5.1 மருவிவரும் பாரம்பாரிய கலை, கலாச்சாரங்களை பேணல்.

3.5.1 கலைஞர்களை வெளிகொணர்தலும், கௌரவித்தலும்

3.5.2 கலைநிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடாத்துதல்

**3.6 பணிகள் (செயற்றிட்டங்கள்)**

3.6.1 விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல்

3.6.2 கல்வி நிலையங்களை ஏற்படுத்தல்

3.6.3 நூலகங்களுக்கு உதவி செய்தலும், உருவாக்கலும்.

3.6.4 சந்தை வாய்ப்பை உருவாக்கல்

3.6.5 குடிநீர் வசதியை ஏற்படுத்தல்

3.6.6 சுகாதார வசதியை உருவாக்கல்

3.6.7 அனர்த்த காலங்களில் அகதிகளுக்கு உதவுதல்

3.6.8 சமூக அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வை புத்தகம், சஞ்சிகை, துண்டுப்பிரசுரம், வீதியோர நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் போன்றவற்றினூடு வெளியிடல்.

3.6.9 கலை நிகழ்வுகளை கிராமிய மட்டத்தில் நடாத்துல்

3.6.10 மனித உரிமை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல்

3.6.11 சமூகங்களிற்கிடையே இன, மத, சாதி ரீதியான வேறுபாடுகளை கழைந்து ஒற்றுமையை வளர்க்க நடவடிக்கை எடுத்தல்.

3.6.12 இளைஞர்களுக்கு உயர் கல்வி மற்றும் தொழில் ரீதியாக ஆலோசனைகளை வழங்கள்.

3.6.13 மக்களின் அத்தியவசிய தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல்.

3.6.14 தொழில் பயிற்சிகளை வழங்குவதுடன் அதற்கான உதவிகளையும் வழங்குதல்

3.6.15 கிராமிய மக்களிடையே வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்.

**4 : அதிகாரங்கள்**

4.1 அமைப்பின் நோக்கங்களுக்கு அமைவாக சமூக மற்றும் பாடசாலை பரஸ்பர புரிந்துணர்வுடன் அமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரம்.

4.2 அமைப்பின் நற்பெயரை பாதுகாத்துக் கொள்ளவும் உயரிய நோக்கங்களுக்கு அமைவாக செயற்பாடுகளை திட்டமிட்டு அமுல்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குமான அதிகாரம்.

4.3 அமைப்பின் அங்கத்தவர்களிடம் இருந்து அங்கத்துவ பணம் பெறுவதற்குமான அதிகாரம்.

4.4 சங்கத்தின் நோக்கங்களை அடைவதற்காகவும் சமூக மற்றும் பாடசாலைகளின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்காகவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு தேவையேற்படும் போது நிதிசேகரிப்பினை மேற்கொள்ளும் அதிகாரம்.

4.5 சங்கத்தின் மாதாந்த கூட்டங்கள். வருடாந்த கூட்டங்கள் விசேட கூட்டங்கள். கலந்துரையாடல்கள், நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதற்கும். இதற்காக விசேட தேவையின் நிமித்தம் குழுக்களை அமைப்பதற்குமான அதிகாரம்.

4.6 பாடசாலைகளின் கல்விசார் கல்விசாரா நிகழ்வுகழுக்கு அனுசரணை வழங்குமிடத்து அதனை திட்டமிடல் மற்றும் ஒழுங்குபடுத்தல்களில் பங்குபற்றி ஆலோசனை, பின்னூட்டல்கள் வழங்கி கண்காணிப்பதற்குமான அதிகாரம்.

4.7 சங்கத்தின் நோக்கங்களுக்கு அமைவாக பாடசாலைகளின் கல்விசார் கல்விசாரா நடவடிக்கைகளுக்கான யுக்திகளையும் செயற்பாடுகளையும் பரிந்துரை செய்யும் அதிகாரம்.


4.8 சங்கத்தின் நோக்கங்களுக்கு அமைவாக சமூக வலைத்தளங்கள் வைத்துக்கொள்வதற்கும் சஞ்சிகைகள் மற்றும் நூல்கள் வெளியிடுவதற்குமான அதிகாரம்.

4.9 சங்கத்தின் நோக்கங்களுக்கு அமைவாக துறைசார் நிலையியற் குழுக்களை அல்லது செயற்குழுக்களை அமைப்பதற்கான அதிகாரம்.

4.10 சங்கத்தின் கௌரவத்திற்கும் பெயருக்கும் இழுக்கு அல்லது சட்டமீறலை ஏற்படுத்தியதாக நியாயப்படுத்தபட்ட நடத்தையை மேற்கொண்ட எந்தக் குழு உறுப்பினருக்கும் பொதுச் சபையின் தீர்மானங்களுக்கமைவாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம்.

**சரத்து 5 : சங்கத்தின் கட்டமைப்பு**

இச்சங்கத்தில் ஐந்து கட்டமைப்புகள் கொண்ட சபைகள்,குழுக்கள் இருக்கும். அவையாவன **பொதுச்சபை, மேற்சபை, ஆலோசனைக்குழு, நிருவாக சபை, ஒருங்கிணைப்புக்குழு** என்பனவாகும்.



### 5.1 பொதுச்சபை

பழுகாமம் பாடசாலைகளில் பதிவுசெய்து கல்விபயின்ற 18 வயதுக்கு மேற்பட்ட இச் சங்கத்தில் உறுப்புரிமையை பெற்றுகொண்ட பழையமாணவர்கள் அனைவரையும் கொண்டு அமையப்பெறும் கட்டமைபு பொதுச்சபை எனப்படும்..

### 5.2 மேற்சபை

பொதுச்சபையால் பொதுக்கூட்டத்தில் தேர்ந்து எடுக்கப்பட்டு, சங்கத்தின் மேலான நோக்கத்தை அடையும் பொருட்டு நிருவாக கட்டமைப்புக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் வழங்குவதனூடாகவும் நிருவாகத்தின் தீர்மானத்தின் மீது இறுதி அங்கீகரிப்பாளர்களாக செயற்படும் ஒருங்கிணைக்கப்பட்ட குழுவினர் மேற்சபையாக கருதப்படும்.

### 5.3 ஆலோசனைக் குழு

பொதுச்சபையால் தேர்ந்து எடுக்கப்பட்டு சங்கத்தின் நோக்கத்தை அடைந்துகொள்ளும் செயற்பாடுகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் தேவையான ஆலோசனைகளை வழங்கும், துறைசார் அனுபம் வாய்ந்த குழுவினர் ஆலோசனைக்குழுவாகும்

### 5.4 நிருவாக சபை

பொதுச்சபையால் பொது கூட்டத்தில் தேர்ந்து எடுக்கப்பட்டு சங்கத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கான திட்டங்களை முன்மொழிந்து அத்திட்டங்களை செயற்படுத்தும் மற்றும் பொறுப்புக்கு கூறும் கட்டமைப்புசார் குழு நிருவாக சபையாகும்.

5.4.1 நிருவாகக் சபையில் மொத்தம 24 பேர் உறுப்பினர்களாக இடம்பெறுவர்.

5.4.2 தெரிவுசெய்யப்படுகின்ற நிருவாக சபையின் ஆயுட்காலம் இரண்டு வருடமாகும்.

5.4.3 நிருவாக கட்டமைப்பில் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்படுகின்ற அனைவரும் நிறைவேற்றுக் குழுவில் அங்கத்தவர்களாக இடம்பெறுவர்.

5.4.4 நிருவாகக் குழு உறுப்பினர்கள் தவிர போசகர்கள், ஆலோசகர்கள், மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் அறிக்கையாளர் ஆகியோர் நிறைவேற்றுக் குழுவில் அங்கத்தவர்களாக இருப்பார்கள்.

5.4.5 நிறைவேற்றுக் குழுவானது பாடசாலைகளின் அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைகளுக்குபாடசாலைகளின் நிருவாகத்துடன் இணைந்து சங்கத்தின் நோக்கங்களுக்கு அமைவாக தீர்மானங்களை எடுத்தல் வேண்டும்.

5.4.6 குறித்த நிருவாகம் அவர்களது நிருவாக ஆண்டிற்கான செயற்திட்ட வரைபை உரிய நியம விதிமுறைகளிற்கு ஏற்ப, தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தயார்படுத்தி, அனைத்து செயற்பாடுகளையும் அதனைப் பின்பற்றியதாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

5.4.7 வருடாந்த பொதுக் கூட்டத்தில் செயற்திட்ட வரைபிற்கு அமைவாக செயல் அடைவுமட்டங்களை சிறந்த அளவுகோல்களோடு உறுப்பினர்களுக்கு அறிக்கையாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**5.5 போசகர்கள்**

பொதுச்சபையால் பொது கூட்டத்தில் தேர்ந்து எடுக்கப்பட்டு சங்கத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கக்கூடிய நன்மதிப்பு மிக்க, சிரேஷ்ட பிரஜைகள் ஆவர்.

**5.6 ஒருங்கிணைப்பு குழு**

பொதுச்சபையால் பொது கூட்டத்தில் தேர்ந்து எடுக்கப்பட்டு சங்கத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக பரந்து வாழும் சங்க உறுப்பினர்களை ஒண்றிணைத்து கட்டமைப்பினை விரிவுபடுத்தி வலுச்சேர்க்கச் செயலாற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குழுவினர்.

**5.7 முன்னேற்ற அறிக்கையாளர்**

பொதுச்சபையால் பொது கூட்டத்தில் தேர்ந்து எடுக்கப்பட்டு சங்கத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக, நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளை அவதானித்து அது தொடர்பான முன்னேற்ற அறிக்கையினை பக்கச்சார்பின்றி தயார்செய்து தேவையேற்படும் போது அறிக்கையிடுபவர்.

**சரத்து 06 : சபைகளுக்கான கட்டமைப்பு**

**6.1 பொதுச்சபை**

6.1.1 பொதுச்சபையால் தீர்மானிக்கப்பட்ட பொதுச்சபை அங்கத்துவத்தை பெற தகுதியானவர்கள் பொதுச்சபையால் தீர்மானிக்கப்பட்ட அங்கத்துவ பணத்தை செலுத்தி பொதுச்சபை உறுப்பினராகலாம்.

6.1.2 மேற்குறிப்பிடப்பட்ட (6.1.1இல்) தகுதியானவர்களை தவிர, வேறொருவர் சங்க நடவடிக்கைகளுக்கு அவரது பங்களிப்பு தேவையேற்படும் பட்சத்தில் பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் சங்க உறுப்பினராக்கப்படுவார்.

6.1.3 சங்கத்தின் உயரிய நோக்கத்தை அடைவதற்கான அனைத்துவிதமான நடவடிக்கைகளை தீர்மானிக்கவும், செயற்படுத்துவதற்குமான அதிகாரம் கொண்ட முதற்தர சபையாகும்.

6.1.4 சபைகளை தெரிவு செய்வதற்கும், அதன் உறுப்பினர்களை தெரிவு செய்வதற்குமான அதிகாரம் பொதுச்சபைக்கு உண்டு.

6.1.5 நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் சங்க உறுப்பினர்களின் பெரும்பான்மை விருப்போடு எவ்வேளையிலும் புதிய நிருவாகத்தை தெரிவு செய்வதற்கான உரிமை பொதுச்சபைக்கு உண்டு.

**6.2 மேற்சபை**

6.2.1 சங்கத்தின் நிருவாகத் தீர்மானங்களை பகுப்பய்வு செய்து அனுமதி வழங்குதல்.

6.2.2 சங்கத்தின் நோக்கங்களை அடைவதற்குரிய ஆலோசனைகள் வழங்குதல்

6.2.3 சங்கத்தின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதுடன் தேவையேற்படும் பட்சத்தில் பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து தகவலைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம்.

6.2.4 நிருவாகத்தில் உருவாகும் கருத்துமுரண்பாடுகளை ஆராய்ந்து ஆலோசனை வழங்குதல். தேவையெற்படும் பட்சத்தில் இறுதி தீர்மானத்தினை நிறைவேற்றுதல்.

6.2.5 பொதுச்சபையினால் தெரிவுசெய்யபட்ட சபைகளின் கீழ்வரும் 13 உறுப்பினர்கள் பதவிவழியில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

- போசகர்கள் - 02
- ஆலோசனைக் குழு அங்கத்தவர்கள் - 03 (வெளிநாட்டு அங்கத்தவர் 1, உள்நாட்டு அங்கத்தவர் 2)
- நிருவாக சபை - 06 (தலைவர், செயலாளர், பொருளாளர், இணைத்தலைவர், இணைசெயலாளர், நிதி ஒருங்கிணைப்பாளர்)
- உள்ளக கணக்காய்வாளர் - 01 (உள்நாடு)
- அறிக்கையாளர் - 01

**6.3 நிருவாக சபை**

**6.3.1** பொதுச்சபையினால் நிருவாக சபைக்கு 24 அங்கத்தவர்கள் கீழ்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

| | |
|---|---|
| ➢ தலைவர் | 1 |
| ➢ இணைத்தலைவர் (வெளிநாடு) | 1 |
| ➢ உப தலைவர் | 1 |
| ➢ செயலாளர் | 1 |
| ➢ இணைச் செயலாளர் (வெளிநாடு) | 1 |
| ➢ உப செயலாளர் | 1 |
| ➢ பொருளாளர் | 1 |
| ➢ நிதி ஒருங்கிணைப்பாளர் (வெளிநாடு) | 1 |
| ➢ பாடசாலைகளின் அதிபர்கள் | 3 |
| ➢ பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்கள் | 2 |
| ➢ பழைய மாணவர் சங்க தலைவர்/செயலாளர் | 2 |
| ➢ முன்பள்ளி பிரதிநிதி | 1 |
| ➢ கல்வி ஒருங்கிணைப்பாளர் | 1 |
| ➢ துறைசார் ஒருங்கிணைப்பாளர்கள் (உள்நாடு 01, வெளிநாடு 01) | 2 |
| ➢ தொடர்பு ஒருங்கிணைப்பாளர் (உள்நாடு 01, வெளிநாடு 01) | 2 |
| ➢ உள்ளக கணக்காய்வாளர்( உள்நாடு 01, வெளிநாடு 01) | 2 |
| ➢ அறிக்கையாளர் | 1 |

**6.4 : ஆலோசனைக் குழு**

6.4.1 சங்கத்தின் நிர்வாகத்தினை கொண்டு நடத்துவதற்கான துறைசார் ஆலோசனைகளை வழங்குதல்.

6.4.2 சமூக நலன் சார்ந்த ஆலோசனைகளை வழங்குதல், மாணவர்கள், இளைஞர்களின் ஆலோசனை கருத்தரங்குகளை முன்னெடுத்தல் (மாதத்தில் ஒருதடவை).

### 6.5 ஒருங்கிணைப்பு குழு

6.5.1 இக்குழுவில் ஆறு உறுப்பினர்கள் நிருவாக சபையிலிருந்து பதவி வழியாக தெரிவுசெய்யப்படுவர்கள்.

- இணைத்தலைவர் (வெளிநாடு)
- இணைச்செயலாளர் (வெளிநாடு)
- நிதி முகாமையாளர் (வெளிநாடு)
- தொடர்பு ஒருங்கிணைப்பாளர் (வெளிநாடு)
- தொடர்பு ஒருங்கிணைப்பாளர்
- முன்னேற்ற அறிக்கையாளர்

6.5.2 சங்க பொதுச்சபைக்கு உறுப்பினர்களை இணைப்பதற்கான செயற்படுகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மேற்கொள்ளுதல்

6.5.3 நிருவாக சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் திட்டங்கள் தொடர்வாக அங்கத்தவர்களுக்கு தெளிவுபடுத்துதல்

6.5.4 சங்க நடவடைக்கள் சம்பந்தமான உறுப்பினர்களின் கருத்துக்களை நிருவாகமாட்டத்துக்கு தெரியப்படுத்தல்

6.5.5 நிதி சேகரிப்பு தொடர்பான நடவடிக்கைகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும மேற்கொள்ளுதல்

### 6.6 ஒருங்கிணைப்பாளர்கள்

6.6.1 ஒருங்கிணைப்பு குழுவினால் தேர்ந்து எடுக்கப்பட்டு சங்கத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக வெளிநாட்டில் உள்ள சங்கஉறுப்பினர்களை ஒண்றிணைந்து செயற்படும் வண்ணம் செயலாற்றுபவர்கள்.

6.6.2 சங்க பொதுச்சபைக்கு உறுப்பினர்களை இணைப்பதற்கான செயற்படுகளை் வெளிநாட்டில் மேற்கொள்ளுதல்.

6.6.3 ஒருங்கிணைப்பு குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் திட்டங்கள் தொடர்பாக வெளிநாட்டு அங்கத்தவர்களுக்கு தெளிவுபடுத்துதல்.

6.6.4 சங்க நடவடிக்கைகள் சம்பந்தமான உறுப்பினர்களின் கருத்துக்களை ஒருங்கிணைப்பு குழுவுக்கு தெரியப்படுத்தல்.

### 6.7 உள்ளக கணக்காய்வாளர்கள்

6.7.1 உள்ளக் கணக்காய்வாளர்களாக இரண்டுபேர் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்கள். இதில் ஒருவர் உள்நாட்டில் இருந்தும், மற்றையவர் வெளிநாட்டில் இருந்தும் தெரிவுசெய்யப்படுவார்கள்.

6.7.2 உள்ளக கணக்காய்வாளர்கள் சுயாதீனமாக செயற்படுவார்கள்.

6.7.3 உள்ளக் கணக்காய்வாளரால் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வு செய்யப்பட்டு பொதுச்சபைக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

## 7 உறுப்புரிமை

7.1.1 பழுகாமப் பாடசாலைகளில் மாணவர்களாக பதிவுசெய்து கல்வி பயின்ற 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் உறுப்புரிமையை பெற்றுக்கொள்வதற்கான தகுதியைப் பெறுவர்.

7.1.2 பாடசாலைப் பழைய மாணவர்கள் உறுப்புரிமையை பெறும்பொருட்டு விண்ணப்பிப்பதற்கு, குறிப்பிட்ட விண்ணப்பப்படிவம் சங்கத்தின் பொதுச்செயலாளரிடம் பெற்றுக் கொள்வதற்கு இலகுவான நடைமுறை பின்பற்றப்படல் வேண்டும்.

7.1.3 விண்ணப்பப் படிவம் உரிய முறையில் நிரப்பப்பட்டு, குறித்த விண்ணப்பதாரர் பழுகாமம் பாடசாலைகளில் ஏதாவது ஒன்றில் கல்வி கற்றவர் என்பது, அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர்களால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே உறுப்புரிமை பெறுவதற்கான பூரண தகுதியை விண்ணப்பதாரர் பெறுவார்.

7.1.4 உறுப்பினராக இணைத்துக் கொள்ளும் செயன்முறையில் வெளிப்படைத்தன்மை பேணப்படுவதோடு ஒவ்வொருவருக்கும் அங்கத்துவ அட்டை வழங்கப்படுதல் வேண்டும்.

7.1.5 பொதுச்சபையால் தீர்மானிக்கப்பட்ட பொதுச்சபை அங்கத்துவத்தை பெற தகுதியானவர்கள் பொதுச்சபையால் தீர்மானிக்கப்பட்ட அங்கத்துவ பணத்தை செலுத்தி பொதுச்சபை உறுப்பினராகலாம்.

7.1.6 சபைகளுக்கான கட்டமைப்பு 6.1.1 இல் குறிப்பிட்டதற்கு அமைய தகுதியானவர்களை தவிர, வேறொருவர் சங்க நடவடிக்கைகளுக்கு அவரது பங்களிப்பு தேவையேற்படும் பட்சத்தில் பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் சங்க உறுப்பினராக்கப்படுவார்.

### 7.2 பொதுச்சபை உறுப்புரிமை வகைகள்

7.2.1 **சாதாரண உறுப்புரிமை :** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் வருடாந்த சந்தாவைச் செலுத்தி, சாதாரண உறுப்புரிமையை பெறுவதோடு தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் சந்தாவைச் செலுத்தி உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்ளலாம். புதுப்பித்துக்கொண்ட உறுப்புரிமை ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும்.

7.2.2 **ஆயுட்கால உறுப்புரிமை :** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் ஆயுட்கால சந்தாவைச் செலுத்தி ஆயுட்கால உறுப்பினராக அங்கம் வகிக்கலாம்.

### 7.3 உறுப்புரிமை இழந்துபோதல்

7.3.1 இறப்பு

7.3.2 சங்கத்தின் நற்பெயருக்கோ, நோக்கங்களுக்கோ பங்கம் விளைவிப்போர் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளில் குற்றம் நிரூபிக்கப்படின் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் பெரும்பான்மை விருப்புடன் உறுப்புரிமை இரத்துச் செய்யப்படல்.

7.3.3 சுயவிருப்பின்பேரில் விலகுதல்.

7.3.4 உறுப்புரிமையை புதுப்பித்துக்கொள்வதிலிருந்து தவறுதல்.

**7.4 உறுப்பினர்களின் உரிமை**

7.4.1 பொதுச்செயலாளரினால் அனுப்பப்படுகின்ற அனைத்து தொடர்பாடல்களையும் பெறுவதற்கு உரித்துடையவராதல்

7.4.2 வாக்களிக்கும் உரிமை.

7.4.4 நிருவாகத்தில் அங்கத்தவராக இடம்பெறும் உரிமை.

7.4.5 நிர்வாகத் தெரிவின்போது அங்கத்தவர்களை முன்மொழிதல் மற்றும் வழிமொழியும் உரிமை.

7.4.6 ஆக்கபூர்வமான கருத்துக்களை சுயாதீனமாக தெரிவிக்கும் உரிமை,

7.4.7 சங்கத்தின் செயல்திட்டம் மற்றும் நிதிசார் நடவடிக்கைகள் சார்பாக தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும் அறிவதற்குமான உரிமை.

7.4.8 சங்கத்தில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான உரிமை.

**8 கட்டணமும் சந்தாவும்**

8.1 சாதாரண உறுப்புரிமையை கொண்டுள்ளவர்கள் அனைவரும் ஒவ்வொரு வருடமும் சாதாரண உறுப்புரிமைக்கென பொதுச்சபையினால் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தி உறுப்புரிமையை புதுப்பித்துக்கொள்ளலாம்.

8.2 ஆயுட்கால உறுப்புரிமைக்கான பணத்தினைச் செலுத்தி ஆயுட்கால உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ளலாம்.

8.4 விசேட திட்டங்களின்போதான நிதி திரட்டல்களிற்கு அங்கத்தவர்கள் அவர்களின் இயலுமைக்கேற்ப்ப தங்களின் பங்களிப்பை நல்கலாம்.

**9. துறை சார் நிலையியல் குழுக்கள்**

9.1 அமைப்பின் நோக்க்ங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு தேவையேற்படின் நிருவாகக் குழுவினால் பொருத்தமான நிலையியற் குழுக்களை உருவாக்கி செயற்படுத்தலாம்.

9.2 ஒரு குழுவில் ஐந்து தொடக்கம் ஏழு பேர் அங்கம் வகிப்பர்.

9.3 மேற்குறிப்பிடப்பட்டுள்ள துறைகளைவிட தேவையேற்படுமிடத்து நிர்வாகக்குழு விசேட தேவைகளின் அடிப்படையில் வேறு குழுக்களையும் அமைக்கலாம்.

9.4 நிலையியற் குழுக்களின் முன்னேற்ற அறிக்கை மற்றும் நடவடிக்கைகளை துறைசார் ஒருங்கிணைப்புச் செயலாளர்கள் நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களில் அறிக்கையாக சமர்ப்பித்தல் வேண்டும்.

9.5 நிர்வாகசபையின் அங்கீகாரத்தின் பின்னரே நிலையியற் குழுக்களின் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படும்.

9.6 துறைசார் ஒருங்கிணைப்பாளர்களின் வழிநடத்தலில் இக்குழு செயற்படும்.

**10. நிதிசார் நியதிகள்**

10.1 அங்கீகாரம் பெற்ற அரச வங்கியில் சங்கமானது பொருளாளருடன் இணைந்து பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிருவாக சபை உறுப்பினர்களுடன் இணைந்து சங்கத்தின் பெயரில் கூட்டுக்கணக்கொன்றை வைத்திருக்க அனுமதியளிக்கிறது. பொதுச்சபையால்அங்கீகரிக்கப்பட்ட முறையில் வங்கி நடைமுறைகள் பேணப்படும்.

10.2 சந்தாப் பணத்தை விட வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு முன்பு விசேட தேவை கருதி நிதி தேவைப்படும் பட்சத்தில் நிருவாக குழுவிடமிருந்தோ அல்லது உறுப்பினர்களிடமிருந்தோ தேவையை பூர்த்திசெய்வதற்கேற்றாற்போல் பணம் வசூலிக்கப்படலாம்.

10.3 சங்கத்தின் சார்பில் அல்லது சங்கத்தின் பேரில் திரட்டப்படுகின்ற அல்லது கிடைக்கப்பெறுகின்ற எந்தவொரு நிதியும் சங்கத்தின் கட்டமைப்பு அல்லாத எந்தவொரு மாற்று வழிகளிலும் கணக்குப் பேணப்படவோ அல்லது கையாளப்படவோ முடியாது.

10.4 கணக்கறிக்கைகள் உள்ளக் கணக்காய்வாளர்களால் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வு செய்யப்பட்டு பொதுச்சபைக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். கணக்குகள் ஒவ்வொரு நிதியாண்டும் அங்கீகரிக்கப்பட்ட வெளியக கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்பட்டு கணக்காய்வு அறிக்கை செய்யப்பட்டு அறிக்கை பொதுச்சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

10.5 நிதிசார் கொடுக்கல் வாங்கல்களுக்கான அனைத்து ஆவணங்களும் வெளிப்படைத் தன்மையுடையதாகவும், நம்பகத் தன்மையுடையதாகவும் இருப்பதோடு பாதுகாக்கப்படுவதும் ஆவணப்படுத்தப்படுவதும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

10.6 சங்கத்திற்கு நன்கொடையாகவோ அல்லது வேறு வடிவிலோ கிடைக்கப்பெறும் அனைத்து நிதிகளும் உடனடியாக வங்கியில் வைப்பிடப்படல் வேண்டும்.

10.7 நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா ஒரு இலட்சம் தொகையினை பொருளாளர் கையிருப்பில் வைத்து சிறு செலவுகளை பூர்த்தி செய்ய பயன்படுத்தலாம்.

## 11. சபைகளின் உறுப்பினர்களின் கடமைகளும், பொறுப்புக்களும்.

### 11.1 தலைவர்

11.1.1 தெரிவுசெய்யப்படும் அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் சங்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் நிர்வாக படிமுறையில் அதி உயர் ஸ்தானத்தில் இருந்து கொண்டு சங்கத்திற்கு தலைமை தாங்குதல்.

11.1.2 சங்கத்தின் நோக்கங்களை அடைவதற்குரிய தலைமைத்துவத்தை வழங்குதல்.

11.1.3 சங்கத்தின் நடவடிக்கைகளிற்கு பங்கேற்புடனான தீர்மானங்களை மேற்கொள்ளும் படிமுறைக்கு தலைமை தாங்குதல்.

11.1.4 சங்கத்தின் ஒழுங்கு, மற்றும் விழுமியங்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.

11.1.5 சங்கத்தின் சகல நடவடிக்கைகள் சார்பாக அங்கத்தவர்களுக்கு பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளார்.

11.1.6 சமூகம் சார்பான பொது நிகழ்வுகளில் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவார்.

11.1.7 சங்கத்தின் அனைத்துக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குவதோடு சங்கத்தின் ஒழுங்கையும், கௌரவத்தையும் பாதுகாப்பதில் அதியுன்னத இடத்தைப் பெறுபவராவார். சங்கத்தின் நடவடிக்கைகளில் தீர்மானங்களை மேற்கொள்வதில் கூடிய அதிகாரத்தினை உடையவர்.

11.1.7 நிதிசார்பான அனைத்து விடயங்களிலும் தலைவராக செயற்படும் அதிகாரம்

### 11.2 இணைத்தலைவர்

11.2.1 தெரிவுசெய்யப்படும் அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் இணைத்தலைவர் வெளிநாடொன்றில் நிரந்தரமாக வாழும் சங்கத்தின் உறுப்பினராயிருப்பதோடு நிருவாகக் கட்டமைப்பு மற்றும் நிருவாக படிமுறையில் உயர் ஸ்தானத்தில் இருந்து கொண்டு சங்கத்தின் வெளிநாட்டு நடவடிக்கைகள் அனைத்தையும் தலைமை தாங்கிச்செயலாற்றி சங்கத்தின் தலைவருக்கு உறுதுணையாயிருப்பார்.

### 11.3 உப தலைவர்

அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் தேர்வு செய்யப்பட்ட தலைவர் இல்லாதவிடத்து தலைவருக்கு இருக்கக்கூடிய நிதிச்செயற்பாடுகள் தவிர்ந்த முழு அதிகாரத்தையும் உபதலைவர் பெறுகிறார்.

## 11.4 செயலாளர்

11.4.1 அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் தேர்வு செய்யப்பட்ட செயலாளர் சங்கத்தின் நோக்கங்களை அடைவதற்குரிய ஆரோக்கியமான பங்களிப்பை வழங்குவார்.

11.4.2 சங்கத்தின் ஒழுங்கு, பண்பாடு, விழுமியம் என்பவை பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.

11.4.3 சரத்து 12, 13 களிற்கு அமைய அனைத்துக் கூட்டங்களையும் நடாத்தும் முக்கிய பொறுப்பைக் கொண்டவர்.

11.4.4 அனைத்து கூட்டங்களைப் பற்றிய அறிக்கையைப் பேணுதலும், சங்கபொதுக்குழு, நிறைவேற்றுக் குழு என்பவற்றின் முடிவுக்கேற்ப தொடர்பாடல்களையும் மேற்பார்வை நடவடிக்கைகளையும் முன்னின்று வழிநடத்தும் பொறுப்பைப் பெறுகின்றார்.

11.4.5 சங்கத்தின் வருடாந்த வேலைத்திட்டத்தை தயார்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் செயற்பாடுபகளில் பிரதானமான செயற்பாட்டளராக இருத்தல்.

11.4.6 சங்கத்தின் வெளிப்பாட்டுத்தன்மை, அங்கத்தவர் சேர்க்கை, பங்குபற்றவைத்தல் செயற்பாடுகளில் அங்கத்தவர்களை ஊக்குவித்தல்.

11.4.7 அங்கத்தவர் அனைவரினதும் விபரங்களை தரவுக்கோவையொன்றில் பேணுதல் மற்றும் புதிப்பித்தல்

11.4.8 சென்ற கூட்ட அறிக்கையை சபையில் வாசித்து வெளிப்படுத்துதல், வருடாந்த செயற்பாடு பற்றிய அறிக்கையை வருடாந்தபொதுக் கூட்டத்தில் வாசித்து வெளிப்படுத்தல்.

11.4.9 சங்கத்தின் ஆவணங்களை பாதுகாப்பாக பேணுதல்

## 11.5 துணைச் செயலாளர்

தெரிவுசெய்யப்படும் அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் துணைச்செலாளர் வெளிநாடொன்றில் நிரந்தரமாக வாழும் சங்கத்தின் உறுப்பினராயிருப்பதோடு நிருவாகக் கட்டமைப்பு மற்றும் நிருவாக படிமுறையில் இருந்து கொண்டு சங்கத்தின் வெளிநாட்டு நடவடிக்கைகள் செயற்பாடுகளுக்கு பொறுப்பயிருந்து செயலாற்றி சங்கத்தின் செயலாளருக்கு உறுதுணையாயிருப்பார்.

## 11.6 உப செயலாளர்

11.6.1 செயலாளர் இல்லாதவிடத்து செயலாளருக்கு இருக்கக்கூடிய நிதிச்செயற்பாடுகள் தவிர்ந்த முழு அதிகாரத்தையும் உபசெயலாளர் பெறுகிறார்.

## 11.7 பொருளாளர்

11.7.1 சங்கம் தொடர்பான அனைத்து நிதியையும் உரிய நியதிகளுக்கேற்ப நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்துடன் கையாளும் உரித்துடையவர்.

11.7.2 இந்நிதியின் வரவு செலவு பற்றிய துல்லியமான அறிக்கையைப் பேணுவதற்கு கடமைப்படுத்தப்படுகின்றார்.

11.7.3 சரத்து 10 இன்படி நிதிசார் நடவடிக்கைகள் பேணப்படுவதை உறுதிப்படுத்தல்.

11.7.4 ஒவ்வொரு மாதாந்தக் கூட்டத்திலும் வரவு, செலவு மீதி பற்றிய கணக்கு விபரத்தை நிருவாகசபைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதுடன் உள்ளக கணக்காய்வாளரின் கணக்கறிக்கையை அடுத்துவரும் நிருவாகசபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தல். அத்துடன் கணக்காய்வாளரினால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட அறிக்கையோடு வருடாந்த பொதுக் கூட்டத்தில் வருடத்திற்குரிய வரவு, செலவு அறிக்கையை சமர்ப்பிக்கும் பொறுப்புடையவராகின்றார்.

11.7.5 அவசர கையிருப்பு அல்லது சில்லறைக் கையிருப்பு ரூபாய் ஒருலட்சத்தைத் தவிர சரத்து 10 இன் படி மற்றைய நிதியினை வங்கிக்கணக்கில் வைப்பலிடுவதற்கு பொறுப்புடையவராகின்றார்.

11.7.6 பெறப்படுகின்ற அனைத்து நிதிக்கும் பற்றுச் சீட்டை வழங்கும் கட்டாயத்துக்கும், கணக்குப் பதிவுப்புத்தகம், நிதி தொடர்பான ஆவணங்கள் பற்றுச் சீட்டுகள் போன்றவற்றை கணக்காய்வாளர்களுக்கு சமர்ப்பிப்பதற்கும் தேவைப்படும் பட்சத்தில் நிதி தொடர்பான விசாரணைகளுக்கு முகம் கொடுக்கவும் கடமைப்பட்டுள்ளரர்.

## 11.8 நிதி ஒருங்கிணைப்பாளர்

11.8.1 தெரிவுசெய்யப்படும் அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் நிதி ஒருங்கிணைப்பாளர் வெளிநாடொன்றில் நிரந்தரமாக வாழும் சங்கத்தின் உறுப்பினராயிருப்பதோடு நிருவாகக் கட்டமைப்பு மற்றும் நிருவாக படிமுறையில் இருந்து கொண்டு சங்கத்தின் வெளிநாட்டு நிதி செயற்பாடுகளுக்கு பொறுப்பயிருந்து செயலாற்றி சங்கத்தின் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளுக்கு உறுதுணையாயிருப்பார்.

11.8.2 சங்கத்தின் நிதி சார்ந்த விடயங்களை வெளிநாடு வாழ் அங்கத்தவர்களுடன் பகிர்ந்து கொள்ளலும், நிதி சார் தேவைப்பாடுகளை வெளிநாட்டு அங்கத்தவர்களிற்கு தெளிவு படுத்துதலும நிதிப்பெறுகைகளை ஒருங்கிணைத்தலும்.

11.8.3 அறவிடப்படும் நிதியினை சங்க கணக்குகில் வைப்பிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

11.8.4 சங்கத்தின் பொருளாளருடனும் உள்நாட்டு நிருவாகத்துடனும் நிதி தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

11.8.5 நிதிதிட்டமிடல், பயன்படுத்தப்படும் வழிமுறைகளை வெளிநாட்டு அங்கத்தவர்களுக்கு தெரியப்படுத்துதல்.

11.8.6 உள்ளககணக்காய்வு நடைபெறுவது உறுதிப்படுத்தல்.

**11.9 பாடசாலைகளின் அதிபர்கள்**

11.9.1 தெரிவுசெய்யப்படும் அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் வினைத்திறனான செயற்பட்டை முன்னெடுப்பதற்காக எமது கிராமத்திலுள்ள மூன்று பாடசாலைகளின் அதிபர்கள் பதவி வழியாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

11.9.2 மாணவர்களின் கல்வி, விளையாட்டு, கலைத் துறைகளில் முன்னேற்றத்துக்கு தேவையான செயற் திட்டக்களை நிருவாகத்திற்கு சமர்ப்பதல்.

11.9.3 நிருவாகத்தினால் முன்னெடுக்கப்படும் மாணவா் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு பூரண ஒத்துளைப்பை நல்குதல்.

11.9.4 சங்க அங்கத்தவர்களை இணைப்பதற்கு தேவையான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

**11.10 பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்**

11.10.1 தெரிவுசெய்யப்படும் அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் வினைத்திறனான செயற்பட்டை முன்னெடுப்பதற்காக பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம், திருப்பழுகாமம் விபுலானந்தா வித்தியாலய அபிவிருத்திச் சங்கங்களிலிருந்து தலா ஒருவர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

11.10.2 மாணவர்களின் கல்வி, விளையாட்டு, கலைத் துறைகளில் முன்னேற்றத்துக்கு தேவையான செயற் திட்டக்களை நிருவாகத்திற்கு சமர்ப்பதல்.

11.10.3 நிருவாகத்தினால் முன்னெடுக்கப்படும் மாணவா் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு பூரண ஒத்துளைப்பை நல்குதல்.

**11.11 பழைய மாணவர் சங்க சங்க உறுப்பினர்கள்**

11.11.1 தெரிவுசெய்யப்படும் அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் வினைத்திறனான செயற்பட்டை முன்னெடுப்பதற்காக பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம், திருப்பழுகாமம் விபுலானந்தா வித்தியாலய பழையமாணவர் சங்கங்களிலிருந்து தலா ஒருவர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

11.11.2 மாணவர்களின் கல்வி, விளையாட்டு, கலைத் துறைகளில் முன்னேற்றத்துக்கு தேவையான செயற் திட்டக்களை நிருவாகத்திற்கு சமர்ப்பதல்.

11.11.3 நிருவாகத்தினால் முன்னேடுக்கப்படும் மாணவா் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு பூரண ஒத்துழைப்பை நல்குதல்.

11.11.4 சங்க அங்கத்தவர்களை இணைப்பதற்கு தேவையான செயற்பாடுகளை முன்னேடுத்தல்.

**11.12 முன்பள்ளி பிரதிநிதி**

11.12.1 தெரிவுசெய்யப்படும் அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் வினைத்திறனான செயற்பட்டை முன்னெடுப்பதற்காக முன்பள்ளி ஆசிரியையில் ஒருவர் தெரிவு செய்யப்படுவர்.

11.12.2 முன்பள்ளி சிறார்களுக்கான மேம்பாடான ஆரம்பக்கல்வி சூழலை ஏற்படுத்துவதற்கு தேவையான செயற்திட்டங்களை முன்மொழிதல்.

11.12.3 நிருவாகத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்களுக்கு பூரண ஒத்துளைப்பை நல்குதல்.

**11.13 கல்வி ஒருங்கிணைப்பாளர்**

11.13.1 தெரிவுசெய்யப்படும் அபிவிருத்திக்கான பழுகாமம் பழைய மாணவர் சங்கத்தின் கல்வி சார் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு முன்னின்று செய்யப்டுவார்.

11.13.2 கல்விசார் செயற்படுகளுக்கு ஆலோசனைகளை வளங்குதல்.

**11.14 தொடர்பு ஒருங்கிணைப்பாளர்**

11.14.1 தொடர்பு ஒருங்கிணைப்பாளர்கள் இருவர் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்கள். இதில் ஒருவர் உள்நாட்டில் இருந்தும், மற்றையவர் வெளிநாட்டில் இருந்தும் தெரிவுசெய்யப்படுவார்கள்.

11.14.2 சங்க பொதுச்சபைக்கு உறுப்பினர்களை இணைப்பதற்கான செயற்படுகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மேற்கொள்ளுதல்.

11.14.3 நிருவாக சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் திட்டங்கள் தொடர்வாக அங்கத்தவர்களுக்கு தெளிவுபடுத்துதல்.

11.14.4 சங்க நடவடைக்கள் சம்பந்தமான உறுப்பினர்களின் கருத்துக்களை நிருவாகமாட்டத்துக்கு தெரியப்படுத்தல்

**11.15 நிருவாக உறுப்பினர்கள்**

11.15.1 நிருவாக உறுப்பினர்கள் இருவர் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்கள்.

11.15.2 நிருவாக கூட்டங்களில் தவறாது கலந்து கொள்ளுதல்.

11.15.3 நிருவாகத்துக்கு தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளுதலும் தொடர்புகளை மேற்கொள்ளுதல்.

11.15.4 நிருவாக மாட்டத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானக்களையும் நிறைவேற்றுவதற்கு அனைத்துவிதமான ஒத்துழைப்பினையும் வழங்குதல்.

**11.16 உள்ளக கணக்காய்வாளர்கள்**

11.16.1 உள்ளக் கணக்காய்வாளர்களாக இரண்டுபேர் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்கள். இதில் ஒருவர் உள்நாட்டில் இருந்தும், மற்றையவர் வெளிநாட்டில் இருந்தும் தெரிவுசெய்யப்படுவார்கள்.

11.16.2 உள்ளக் கணக்காய்வாளரால் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வு செய்யப்பட்டு பொதுச்சபைக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

11.16.3 சங்கத்தின் கணக்கு ஆவணங்களை சுழற்ச்சி முறையில் பரிசிலித்து அசதாரண செலவுகளின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தல்.

11.16.4 கணக்கேடுகளில் பதியப்பட்ட பணவரவு செலவுகளை வங்கி கூற்றுடன் சரிபார்த்தல்.

11.16.5 முன்னேற்ற அறிக்கை தொடர்பான நம்பகத்தன்மை பற்ற ிஉள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடுதல்.

**11.16 முன்னேற்ற அறிக்கையாளர்**

11.16.1 சங்கத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக, நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளை அவதானித்து அது தொடர்பான முன்னேற்ற அறிக்கையினை பக்கச்சார்பின்றி தயாரித்து நிருகா சபைக்கு சார்ப்பித்தல்.

11.16.1 தேவையெற்படின் விசேட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அறிக்கையினாா் நிருவாக சபையின் தீர்மானத்துக்கமைய தயாரித்தல்.

**12. கூட்டங்கள்**

12.1 நிறைவேற்றுக்குழு மாதம் ஒருமுறையும் அவசர தேவைகள் ஏற்படுமிடத்து மாத இடையிலும் கூட்டம் நடைபெறும்.

12.2 வருடாந்த பொதுக்கூட்டம் ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் ஒரு பொருத்தமான நாளில் இடம்பெறல் வேண்டும்.

12.3 விசேட பொதுக்கூட்டம் தலைவரினால் அல்லது 40 தகுதி பெற்ற உறுப்பினர்களால் கையொப்பமிட்டு கூட்டப்படுமிடத்து கோரப்பட்டவிடயத்தைத் தவிர வேறு எந்த விடயங்களும் ஆராயப்படமாட்டாது.

12.4 பொதுக்கூட்டமானது கூட்டப்படும் சந்தர்ப்பங்களில் உறுப்பினர்தொகை குறைந்தபட்சம் 40 ஆக கணப்படுதல் வேண்டும்

12.4 உறுப்பினர்கள் சங்கத்தின் கூட்டங்களில் சங்கத்தின் கௌரவத்தையும், மதிப்பையும் முன் மாதிரியையும் பாதுகாப்பதாக நடத்துகொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது. எந்தவொரு உறுப்பினரின் நடவடிக்கையும் சங்கத்தின் நற்பெயரையோ, பாரம்பரியத்தையோ, பண்பாட்டையோ, புனித நோக்கத்தையோ சிதைப்பதாக இருக்கக்கூடாது என எதிர்பார்க்கப்படுகின்றது.

12.5 கூட்டங்களுக்கான, அறிவித்தல் சரத்து 13 இல் கூறப்பட்டுள்ளது போல் அனுப்பப்படல் வேண்டும்.

**13. அறிவித்தல்கள்**

கூட்டத்தை அறிவிக்கும் செல்லுபடியான அறிவித்தல் நாட்கள்

- நிறைவேற்றுக் குழுக் கூட்டம் — 7 நாட்களுக்குள்
- அவசரக் கூட்டம் — 24 மணிநேரம்
- விசேட பொதுக்கூட்டம் — 03 நாட்களுக்குள்
- வருடாந்தபொதுக் கூட்டம் — 14 நாட்களுக்குள

**14. வாக்களிப்பும் தீர்மானங்களும்**

14.1 சந்தா செலுத்திய எல்லா உறுப்பினரும் வாக்களிக்க தகுதியுடையவராகிறார்கள். எல்லா தீர்மானங்களும் முன்மொழிவுகளும் கூட்டத்தில் பிரசன்னமாயிருக்கும் பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானிக்கப்படும்.

14.2 வாக்களித்தல் கையுயர்த்தல் மூலமோ அல்லது இரகசிய வாக்களிப்பு மூலமோ உறுப்பினர்களின் முடிவின் படி தீர்மானிக்கப்படும்.

14.3 முடிவு எட்டப்படாத தீர்மானங்கள் வாக்களிப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
பொதுக்கூட்டத்தீர்மானம் - பிரசன்னமாகியிருப்பவர்களில் 80 சதவீதமானவர்கள்.
மேற்சபை தீர்மானங்கள் - பிரசன்னமாகியிருப்பவர்களில் 80 சதவீதமானவர்கள்.
நிருவாக சபைத் தீர்மானங்கள் - பிரசன்னமாகியிருப்பவர்களில் 80 சதவீதமானவர்கள்.

**15. கிளைச் சங்கங்கள்**

15.1 தேவையேற்படின் பொதுச்சபையின் தீர்மானத்திற்கமைய கிளைச் சங்கங்கள் உருவாக்கப்படலாம்.

15.2 கிளைச் சங்கங்களின் உப விதிகள் இந்த யாப்பின் அடிப்படையில் உருவாக்கப்படல் வேண்டும்.

**16. முரண்பாட்டு முகாமைத்துவம்**

பொதுக்கூட்டங்களில் தீர்மானங்களை மேற்கொள்ளும் போதிலோ நிர்வாகம் சார் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படும் வேளையிலோ அல்லது ஏனைய முரண்பாட்டு சூழ்நிலைகளில் முரண்பாட்டினை தீர்ப்பதற்கான பொறிமுறை மேற்சபை குழுவினால் முன்னெடுக்கப்படும்.

**17. பொதுவான அறிவுறுத்தல்கள்**

17.1 பொதுச்சபையால் பொது கூட்டத்தில் தேர்ந்து எடுக்கப்படும் சபைகளின் அல்லது குழுக்களின் உறுப்பினர்களை ஒருபதவிக்குமேல் தெரிவு செய்ய முடியாது.

17.2 சங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்ப்படுத்தாமல் நம்பகத்தன்மையோடும் வெளிப்படைத் தன்மையோடும் செயற்படுதல்.

17.3 வருடாந்த பொதுக்கூட்டத்தில் கொண்டு வரப்படுகின்ற பிரேரணைகள் முன்மொழிபவர் வழிமொழிபவரினால் கையொப்பமிடப்பட்டு 7 நாட்களுக்கு முன்பாக பொதுச் செயலாளரிற்கு கிடைக்கக் கூடியதாக இருப்பதோடு அவர்களில் ஒருவரேனும் கூட்டத்தில் பிரசன்னமாகி இருத்தல் வேண்டும்.

17.4 பொருத்தமான காரணத்தால் பிற்போடப்படும் எந்தவொரு கூட்டமும் மீள் அறிவித்தலின் மூலம் அடுத்த பொருத்தமான திகதியில் நடாத்தப்படும்.

17.5 பாடசாலை அபிவிருத்தி மற்றும் பாடசாலை நிகழ்வுகளுக்கு பாடசாலை நிர்வாகத்தால் அழைப்பு விடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறைவேற்றுக் குழுவானது உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

17.6 சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பாடசாலை தொடர்பான எந்த செயற்பாடுகளும் பாடசாலை அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்படல் வேண்டும். மேலும் அதிபருடனான பரஸ்பர புரிந்துணர்வுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

17.7 வெளிநாட்டுக் கிளைகளினூடாக அல்லது வேறு வழிகளிலோ கிடைக்கப்பெறும் நிதிசார் விடயங்கள் வெளிப்படைத்தன்மையை கொண்டிருக்க வேண்டும்.

**18 . திருத்தங்கள் மற்றும் விளக்கங்கள்**

18.1 இந்த யாப்புக்கான திருத்தங்கள் எவையாயினும் அவை வருடாந்த பொதுக் கூட்டத்தில் அல்லது விசேட பொதுக் கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குபலத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

18.2 இவ்யாப்பின் விளக்கங்கள் அனைத்தும் சங்கத்தின் பொறுப்பாண்மைக்குரியது. யாப்பிலிருந்து விலகி செய்யப்படவேண்டிய எந்தச் செயற்பாடும். பொதுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும். அதுவே அச்செயற்பாட்டிற்கு இறுதித் தீர்மானமாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் கருதப்படும்.

**19. யாப்பு ஏற்பு**

எமது கிராமமத்தின் சமூக அபிவிருத்தியிலும் மற்றும் கல்வி அபிவிருத்தியிலும் ஆர்வமும் அக்கறையும் கொண்ட பழைய மாணவர்களினால் ஒருங்கிணைக்கப்பட்ட கலந்துரையாடலின் பிரகாரம் , கூட்டிணைந்து செயற்படுவதட்கான அமைப்புசார் ஒழுங்கமைப்பில் அவசியம் தெளிவாக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற பல சுற்று கலந்துரையாடலில் யாப்பு மற்றும் கடடமைப்பின் வரைவுக்கான கருத்துக்கள் பரிமாறப்பட்டு, யாப்பின் வரைவும் அமைப்பின் உத்தேச கடடமைப்பும் 02.10.2022 அன்றய கூடத்தில் யாப்பு வரைவு குழுவினரால் விளக்கத்துடன் சமர்பிக்கப் பட்டு, சபயோரின் கருத்துக்களும் , திருத்தங்களும் உள் வாங்கப்பட்டு இறுதி செய்யப்படட இவ் யாப்பு ஆனது பொது சபையில் ஏக மனதாக பெரும் பான்மையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது .